வகுப்பு - 8 - வேதியியல், 13. நீர்

106. படத்திலிருந்து நாம் உணர வேண்டியது _____.



1. நாம் குறைந்த அளவே நீர் பருகுகிறோம்.
2. கை கழுவுதல், கழிவு நீக்கம் போன்றவற்றில் பழைய முறையே சிறந்தது.
3. கை கழுவும் தொட்டியின் மேல் எதிரொளிப்புக் கண்ணாடி அவசியம்.
4. அனைத்தும்.

107. விவசாயத்தால் எவ்வாறு நீர்நிலைகள் மாசுபடுகிறது?

1. செயற்கை உரங்களை பயன்படுத்துவதால் நீர்நிலைகள் மாசுபடுகிறது.
2. பூஞ்சைக் கொல்லிகள் பயன்படுத்துவதால் நீர்நிலைகள் மாசுபடுகிறது.
3. பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்துவதால் நீர்நிலைகள் மாசுபடுகிறது.
4. அனைத்தும்.

108. கடலில் எண்ணெய் எவ்வகையில் கலக்கிறது?

1. கடல் படுகைக்கு கீழ் உள்ள எண்ணெய் வளங்களை எடுக்கும் பொழுது.
2. கப்பல்களில் ஏற்படும் விபத்துகள்.
3. கடல் சீற்றத்தின் பொழுது கப்பலைக் காக்க எண்ணெயைக் கடலில் கொட்டும் பொழுது.
4. அனைத்தும்.

109. பின்வருவனவற்றுள் நீர் மாசுபடுத்தி எது?

1. வீட்டு உபயோக மாசுபடுத்திகள்.
2. வேளாண் மாசுபடுத்திகள்.

LIVEWORKSHEETS

3. தொழிற்சாலை மாசுபடுத்திகள். 4. அனைத்தும்.

110. தொழிற்சாலைகளுக்கு அருகிலுள்ள நீர்நிலைகளில் வாழும் உயிரினங்கள் மடிவது ஏன்?

1. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் நீரில் கலப்பதால் மட்டுமே.
2. ஒட்டுமொத்த சூழ்நிலை மாறுபாடு.
3. நீரில் கார்பன் டை ஆக்ஸைடு அளவு அதிகரிப்பதால்.
4. நீரில் ஆக்ஸிஜன் அளவு அதிகரிப்பதால்.

111. பின்வருவனவற்றுள் நீரை மாசுபடுத்தும் வீட்டு உபயோக மாசுபடுத்திகள் எவை?

1. தோல் தொழிற்சாலைக் கழிவுகள், ஈயம், மெர்குரி, காட்மியம்...
2. சலவைத்தூள், கிருமி நாசினிகள்
3. உரங்கள், பூச்சிக்கொல்லிகள்
4. அனைத்தும்.

112. பின்வருவனவற்றுள் நீரை மாசுபடுத்தும் வேளாண் மாசுபடுத்திகள் எவை?

1. தோல் தொழிற்சாலைக் கழிவுகள், ஈயம், மெர்குரி, காட்மியம்...
2. சலவைத்தூள், கிருமி நாசினிகள்
3. உரங்கள், பூச்சிக்கொல்லிகள்
4. அனைத்தும்.

113. பருக உகந்த நீரின் தன்மையின் அடிப்படையில் தனித்த ஒன்றைத் தேர்வு செய்க.

1. நிறம், மணம் அற்றதாக இருக்க வேண்டும்.
2. நுண்ணுயிர் நீக்கம் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.
3. தாது உப்புகள் நீக்கம் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.
4. மாசுக்கள் நீக்கம் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.

114. நீர் சர்வ கரைப்பான் என்றழைக்கப்படக் காரணம் _____.

1. நீர் நிறம், மணம் அற்றதாக இருப்பதால்
2. நீர் மாசற்று இருப்பதால்
3. பல்வேறு திட, திரவ, வாயுப்பொருள்களை கரைப்பதால்
4. நீர் அதிகளவு காணப்படுவதால்

115. மைக்ரோ பிளாஸ்டிக் என்றழைக்கப்படும் நுண் நெகிழி காணப்படுவது _____.

LIVEWORKSHEETS

1. அனைத்து நன்னீர் மூலங்கள்

2. ஆழ்கடல் பகுதிகள்

3. குழாய், அடைக்கப்பட்ட புட்டிகளில் உள்ள நீர்

4. மேற்கண்ட அனைத்து இடங்களிலும்

116. நீரில் கார்பன் டை ஆக்ஸைடின் கரைதிறன் எப்போது அதிகரிக்கும்?

(1) வெப்பநிலை அதிகரிக்கும் பொழுது (2) வெப்பநிலை மாறாதிருக்கும் பொழுது

(3) அழுத்தம் அதிகரிக்கும் பொழுது (4) அழுத்தம் குறையும் பொழுது

117. பின்வருவனவற்றுள் நீரை மாசுபடுத்துவது எது?

(1) ஈயம் (2) படிகாரம் (3) ஆக்ஸிஜன் (4) குளோரின்

118. பொருத்துக.

a) சர்வ கரைப்பான் - i) ஒசோனேற்றம்

b) கடின நீர் - ii) நீர்

c) கொதித்தல் - iii) வயிற்று உபாதைகள்

d) நுண்ணுயிர் நீக்கம் - iv) கிருமி நீக்கம்

e) கழிவுநீர் - v) சலவை சோடா

(1) a - ii b - v c - iv d - i c - iii (2) a - iii b - iv c - i d - v c - ii

(3) a - I b - ii c - iv d - iii e - v (4) a - I b - iii c - iv d - ii e - v

NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:

119. ஒரு ஆக்சிஜன் அணு மற்றும் இரண்டு ஹைட்ரஜன் அணுக்கள் சேர்ந்த நீர் என்ற சேர்மத்தின் நிறை விகிதம் என்ன? (NMMS-2016)

(1) 1 : 2 (2) 8 : 1 (3) 1 : 8 (4) 2 : 1

120. **கூற்று (A)**: பனிக்கட்டி வெப்பத்தை ஏற்று உருகி நீராகிறது

காரணம் (R): மேற்கண்ட நிகழ்வு வெப்பம் ஏற்கும் மாற்றம் ஆகும். **(NMMS EXAM) - (2020 - 21)**

(1) A மற்றும் R சரி (2) A மற்றும் R தவறு

(3) A சரி ஆனால் R, A ஐ விளக்கவில்லை (4) A சரி மற்றும் R, A ஐ விளக்குகிறது

LIVEWORKSHEETS